இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. வினாக்கள்-விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 41, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ், மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.

41—

வேலைவாய்ப்பு வழங்குதல்

***36479—திரு. ஆர். நடராஜ்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிறப்பாசிரியர் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ள பார்வைக் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன், பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.

2019 பிப்ரவரி 11]

இந்திய நாட்டின் வரலாற்றில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய வழிகாட்டுதலை பெற்று அரசை நடத்திக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் இந்தியாவே வியக்கத்தக்க அளவிற்கு தொழில் முதலீட்டாளர்களை அழைத்து, புதிய ஒப்பந்தங்களை ஏற்படுத்தி, 3 இலட்சத்து 431 கோடி ரூபாய் அளவிற்கு முதலீடுகளை ஈர்த்துள்ளதன் விளைவாக, வரலாற்றைப் படைக்கின்ற ஒரு மாநிலமாகத் தமிழகம் இன்றைக்குத் திகழ்ந்து கொண்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதே நேரத்தில், 10 இலட்சத்து 50 ஆயிரம் பேருக்கு வேலைவாய்ப்புக்கான உத்தரவாதம் அளிக்கின்ற ஒரு சரித்திர வரலாறு, இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் உருவாக்கப்பட்டிருக்கிறது என்பதை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

(அ) மற்றும் (ஆ) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட கேள்வியைப் பொறுத்தவரையில், 2014 ஆம் ஆண்டு நடைபெற்ற மாற்றுத் திறனாளிகளுக்கான சிறப்பாசிரியர் தகுதித் தேர்வை மொத்தம் 4,693 நபர்கள் எழுதினார்கள். 945 நபர்கள் தேர்ச்சி பெற்றார்கள். இதிலே, பார்வையற்றோர் 239 நபர்கள் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் 4 சதவிகித ஒதுக்கீட்டில், கண் பார்வையற்றவர்களுக்கு 1 சதவிகிதம் என்ற முறையிலும் இவர்கள் பணியமர்த்தப்பட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.*

முற்பகல் 10-05

திரு. ஆர். நடராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மனிதன் கொடுத்தால் நிறையாது; இறைவன் கொடுத்தால் குறையாது'. குறை ஒன்றுமில்லை என்று எல்லா நலத் திட்டங்களுக்கும் குறைவின்றி பட்ஜெட்டில் நிறைவு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மாற்றுத் திறனாளிகளின் நலனைப் பாதுகாக்க, சிறப்புத் திட்டம் வகுத்து, 1994 ஆம் வருடம்* State Policy for Differently Abled persons *என்று அரசின் கொள்கைகளை வெளியிட்டார்கள். இதன்மூலம்*

[2019 பிப்ரவரி 11

மாற்றுத் திறனாளிகள் நலன் காத்த முதல் மாநிலம், தமிழகம் என்ற பெருமையை நாம் அடைந்தோம். அதைத் தொடர்ந்து பல்வேறு நலத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டன. மேலும், அம்மா அவர்களின் வழியில் நல்லாட்சி நடத்தி வரும் அம்மா அவர்களின் அரசு, மாற்றுத் திறனாளிகள் நல ஆணையத்திற்குப் புதிய கட்டடம்; மாற்றுத் திறனாளிகள் நலன் காக்க, தசைச் சிதைவு, மூளை தண்டுவடம் பாதிக்கப்பட்டோருக்காக 3,000 சிறப்பு சக்கர நாற்காலிகள், 3,000 பெட்ரோல் ஸ்கூட்டர்கள்; உயர் தொழில்நுட்ப ஊன்றுகோல்கள் உள்ளிட்ட உபகரணங்கள் வழங்குதல் போன்ற ஏற்கெனவே உள்ள திட்டங்கள் தடையின்றி தொடர பட்ஜெட்டில் 572.19 கோடி ரூபாய் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாற்றுத் திறனாளிகளுக்கு அரசுப் பணிகளில் 3 சதவிகித இட ஒதுக்கீடு வழங்கிய முதல் மாநிலம் தமிழகம். அதனை 4 சதவிகிதமாக உயர்த்தி, தமிழக அரசு 2018 ஆம் ஆண்டு அரசாணை எண் 21-ஐ வெளியிட்டது. அதன்படி அரசு வேலைவாய்ப்பில், ஒரு சதவிகிதம் பார்வையற்றவர்களுக்கும், ஒரு சதவிகிதம் காது கேளாதவர்களுக்கும், ஒரு சதவிகிதம் கை, கால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், ஒரு சதவிகிதம் பலவகையான பாதிப்புகளுக்கு ஆளானவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். மேலும், கல்வித் துறை, அரசாணை எண் 619, நாள் 23-6-1993-ன்படி, பார்வையற்றோருக்கு ஆசிரியர் பணியிடங்களில் ஏற்கெனவே உள்ள ஒரு சதவிகித இட ஒதுக்கீட்டுடன், காது கேளாதவர்களுக்கான ஒரு சதவிகிதம் பார்வையற்றோருக்குக் கூடுதலாக மாற்றிக் கொடுக்கப்படும் என்றும், கற்பித்தல் அல்லா பதவிகளுக்கு-Non-Teaching posts *காது கேளாதோருக்குக் கூடுதலாக ஒரு சதவிகிதம் ஒதுக்கப்படும் என்றும் கூறப்பட்டுள்ளது. இப்போது இந்தக் கூடுதல் ஒரு சதவிகிதம், ஆசிரியர் பணிகளில் பார்வையற்றோருக்கு வழங்கப்படுகிறதா? குறிப்பாக, தமிழ்நாட்டில் 2014 முதல் 2018 ஆம் ஆண்டு வரை நான்கு முறை ஆசிரியர் தகுதித் தேர்வு நடத்தப்பட்டுள்ளது. இதில் ஒரு முறை பார்வையற்றவர்களுக்கான சிறப்பாசிரியர் தகுதித் தேர்வு நடத்தப்பட்டது. இத்தேர்வில் குறைந்தபட்சம் 90 மதிப்பெண்கள் பெற்றவர்கள் வேலைவாய்ப்பினைப் பெறத்தகுதி வாய்ந்தவர்கள் என அரசால் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில், 90 மதிப்பெண்களுக்கும்மேல் மதிப்பெண் பெற்று, அரசின்*

2019 பிப்ரவரி 11]

வேலைவாய்ப்பிற்காகக் காத்திருக்கும் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் அனைவருக்கும் அரசு வேலைவாய்ப்பினை வழங்கி, அவர்களின் வாழ்க்கையில் ஒளியேற்றி வைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், 90 மதிப்பெண்களுக்குக்கீழ் 82 மதிப்பெண்கள் வரை பெற்றவர்களுக்கும் வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று கூறப்பட்டது. இதுகுறித்து ஏதேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறதா என்பதையும் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 3 கேள்விகளை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். குறைந்தபட்சம் 90 மதிப்பெண்கள் பெற்றவர்கள் குறித்து கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் TET தேர்வில் குறைந்தபட்சம் 82 மதிப்பெண்கள் பெற்றிருந்தாலே அவர்களைத் தேர்வு செய்யலாம் என்ற முடிவை மேற்கொண்டார்கள். அதில் O.C.-யைத் தவிர, மற்றவர்கள் 82 மதிப்பெண்கள் பெற்றிருந்தாலே அவர்களுக்கு வேலைவாய்ப்பளிக்கலாம் என்று பெருந்தன்மையோடு அறிவித்தார்கள். இதுகுறித்த வழக்கு உச்ச நீதிமன்றத்திலே நிலுவையிலே இருக்கிறது. மாற்றுத் திறனாளிகளைப் பொறுத்தவரையில், குறிப்பாக பார்வையற்றவர்களுக்கு ஒரு சதவிகிதம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவர்கள் என்றுமே 'இருளிலே' மூழ்கிக்கொண்டிருக்கக் கூடாது என்ற வகையில் அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது. 'பகல்' என்பதே என்ன என்று அவர்களுக்குத் தெரியாது. அப்படிப்பட்ட மாற்றுத் திறனாளிகளின் கண்ணீரைத் துடைப்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் திட்டத்தைக் கொண்டு வந்து ஒரு சதவிகித இட ஒதுக்கீட்டை வழங்கினார்கள். அந்த இடத்திற்குத் தேவையானவர்களை நாம் தேர்வு செய்துள்ளோம். பள்ளிக் கல்வித் துறையின் மூலமாக அந்த ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட்டிருக்கின்றன.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். நடராஜ் அவர்கள்.*

[2019 பிப்ரவரி 11

திரு. ஆர். நடராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறப்பாசிரியர் தகுதித் தேர்வில் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகள் எத்தனை பேர் கலந்து கொண்டார்கள் என்பது பற்றியும், தேர்ச்சி பெற்ற விவரங்கள் பற்றியும் மிகச் சிறப்பாக எடுத்துக்கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அரசுத் துறைகளில் மாற்றுத் திறனாளிகளுக்காக உள்ள அனைத்து காலிப் பணியிடங்களையும் நிரப்ப* TNPSC *மூலமாக விசேஷ தேர்வு நடத்த அரசு முன்வருமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும், அரசாணை எண் 99-ன்படி, ஒரு சதவிகிதத்திற்கும் கூடுதலாக இட ஒதுக்கீடு பார்வையற்றோருக்குக் கொடுக்க வேண்டும். அதாவது, காது கேளாதோருக்கு அளிக்கப்படும் ஒரு சதவிகித இட ஒதுக்கீட்டையும் பார்வையற்றோருக்குக் கொடுக்க வேண்டுமென்ற அரசாணை நடைமுறைப்படுத்தப்படுகிறதா என்பதையும் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறைக்கு மட்டும்தான் என்னால் பதில் சொல்ல முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர்வாணையம் பற்றிக் கேள்வி கேட்டிருக்கிறார்கள். தேர்வாணையம் குறித்து சம்பந்தப்பட்ட அமைச்சர் அவர்களிடத்திலே கேள்வி எழுப்பி, அதற்குரிய பதிலை அவர் தெரிந்துகொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

முற்பகல் 10-10

திரு. கு. பிச்சாண்டி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பார்வைத்திறன் குறைபாடுடைய மாற்றுத் திறனாளிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும்போது தகுதித் தேர்வில் தேர்ச்சி பெறுகின்ற நிலை இல்லாமல் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட* seniority *அடிப்படையில் எப்படி வேலைவாய்ப்பு வழங்கினார்களோ அதுபோல் வேலைவாய்ப்பினை வழங்குவதற்கு*

2019 பிப்ரவரி 11]

அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன். இப்போது NEET தேர்வை நாம் எதிர்க்கின்றோம். அதேபோல் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் படித்தவர்களுக்கெல்லாம் தகுதித் தேர்வு வைப்பதன் காரணமாகப் பல பேருக்கு வேலை கிடைக்காத நிலை இருக்கிறது. ஆகவே, இதற்குமுன்பு seniority அடிப்படையில் எப்படி வேலைவாய்ப்பு கொடுத்தோமோ, அதேபோன்று தேர்வு செய்தால் எல்லா பள்ளிக்கூடங்களுக்கும் ஆசிரியர்களை எளிதாக நிரப்பமுடியும். பல பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்கள் இல்லை என்று மக்கள் போராட்டம் நடத்தக்கூடிய நிலை இருக்கின்றது. அதை மாற்றுவதற்கு பழைய முறையை அரசு கொண்டு வருமா? அதன்மூலம் பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்கு seniority அடிப்படையில் வேலை வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதனை அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டிருக்கின்றார்கள். ஒன்று, பார்வையற்ற மாற்றுத் திறனாளிகளுக்காக வழங்கப்படுகின்ற 1 சதவிகித இட ஒதுக்கீடு சரியாக வழங்கப்படுகின்றதா என்று கேட்டிருக்கிறார்கள். அதனை சரியாக வழங்கிக்கொண்டிருக்கின்றோம். அதேநேரத்தில், ஆசிரியர்கள் சில இடங்களில் இல்லையென்றும் சொன்னார்கள். பல மாவட்டங்களில் அந்தக் குறைபாடுகள் இருப்பது எங்களுக்குத் தெரிய வந்தது. அதற்காகத்தான் ரூ.7,500/- சம்பளத்தில் பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தின் மூலமாக அங்கே ஆசிரியர்களை நிரப்பலாம்; அதன் பிறகு ஆசிரியர்களைத் தேர்வு செய்து படிப்படியாக அந்தப் பணியிடங்களை நிரப்பலாம் என்று அரசு ஆணையிட்டது. இதுசம்பந்தமாக உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு தொடரப்பட்டு, அந்த வழக்கு தற்போது நிலுவையில் இருக்கின்றது. ஆகவே, அந்த வழக்கு முடிந்தவுடன் ரூ.7,500/- சம்பளம் வாங்கும் ஆசிரியர்கள் எந்த இடத்திலும் இல்லையென்ற நிலை தமிழ்நாட்டில் ஏற்படுத்தப்படும் என இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*